2025

No. of Printed Pages : 5

50450

**8619**

பதிவு எண் | | | | | | | |

## இரண்டாம் ஆண்டு

# தமிழ்மொழி கற்பித்தல்

கால அளவு : 3 மணி நேரம் மொத்த மதிப்பெண்கள் : 100

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப் பதிவில் குறையிருப்பின் அவற்றை அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

### பகுதி - I

### பிரிவு - அ

**குறிப்பு :** **அனைத்து** வினாக்களுக்கும், ஒவ்வொன்றிற்கும் **100** சொற்களுக்கு **மிகாமல்** விடையளிக்கவும். **10x2=20**

**1.** ஆசிரியர் <u>பாடஞ்சொன்னார்</u> - அடிக்கோடிட்ட சொல்லைப் பிரித்து புணர்ச்சி விதியை எழுதுக.

**2.** இனங்குறித்தல் என்றால் என்ன ? எடுத்துக்காட்டுத் தருக.

**3.** பார்த்து மகிழ்ந்தான் – இஃது எவ்வகைத் தொடர் என்பதை விளக்குக.

**4.** தேனன்று – என்னும் சொல்லைப் பிரித்தெழுதிப் புணர்ச்சி விதி தருக.

**5.** கீழ்க்காணும் பாடலை உரைநடைப்படுத்தி எழுதுக.

நல்லார் செயுங்கேண்மை நாடோறும் நன்றாகும்
அல்லார் செயுங்கேண்மை ஆகாதே - நல்லாய்கேள்!
காய்முற்றின் தின்தீங் கனியாம் இளந்தளிர்நாள்
போய்முற்றின் என்னாகிப் போம் ?

[ திருப்புக

6. மோர் பருகினான் என்பது எவ்வகைத் தொடர் ? காரணம் எழுதுக.

7. உம்மைத் தொகையை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

8. உரைநடைப் பாடத்தின்வழி, ஆசிரியப் பயிற்சி மாணவர்கள் அடைய வேண்டிய மொழிக் குறிக்கோள்கள் யாவை ?

9. சிறுகதை குறித்து எட்கர் ஆலன்போ கூறும் கருத்தை எழுதுக.

10. தற்குறிப்பேற்ற அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

## பிரிவு - ஆ

குறிப்பு : **எவையேனும் ஐந்து** வினாக்களுக்கு, ஒவ்வொன்றுக்கும் **200** சொற்களுக்கு **மிகாமல்** விடையளிக்கவும். **5x4=20**

11. தொகாநிலைத் தொடர்களை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

12. கீழ்க்காணும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.

மொழி என்பது மக்கள் படைத்துக் காக்கும் அரியதொரு கலை. மொழியே மக்களின் அறிவை வளர்த்து உயர்த்தும் அரிய கருவியாகவும் உள்ளது. பெற்ற தாயின் முதல் வேட்கை தன் குழந்தையுடன் பேசுதல். அவள் முதலில் அடையும் பெரிய மகிழ்ச்சி, குழந்தையின் பேச்சைக் கேட்பதிலேயே ஆகும். குழந்தையின் மன வளர்ச்சியோடு ஒத்து வளர்வது மொழி வளர்ச்சியே ஆகும். மனம் என்பது பெரும்பாலும் மொழியால் அமைந்தது. மனத்தின் வளர்ச்சிக்கு ஏற்பவே பேசுவோரின் மொழியும் வளர்ச்சிபெற்று நிற்கும். மக்கள் அனைவரும் மொழிக்கு ஆசிரியராகவும் உள்ளனர்; மாணவராகவும் உள்ளனர். மொழியை வளர்ப்பவரும் மக்களே; மொழியால் வளர்பவரும் மக்களே.

**வினாக்கள் :**

1. இப்பத்தியின் மையக் கருத்து யாது ?
2. பத்தியில் இடம்பெற்றுள்ள இரு அருஞ்சொற்களை எழுதுக.
3. பெற்ற தாயின் முதல் வேட்கையாகக் குறிப்பிடப்படுவது எது ?
4. குழந்தையின் மனவளர்ச்சியோடு இணைந்து வளர்வது எது ?

13. 'கவிதை'-க்கான வரையறைகளாக கவிஞர்களின் கூற்றுகள் நான்கனை எழுதுக.

14. பிறிதுமொழிதல் அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

15. கீழ்க்காணும் பாடலில் பயின்று வந்துள்ள நயத்தினை விளக்குக.

வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சாரல் நாட செவ்வியை யாகுமதி
யாரஃ தறிந்திசி னோரே சாரற்
சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கி யாங்கிவள்
உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே.

16. கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்.

-மேற்காண் குறளில் அடிக்கோடிட்ட சொல் தரும் பல பொருளை எழுதி, இக்குறளில் எப்பொருளில் வள்ளுவர் கையாண்டுள்ளார் என்பதனை விளக்குக.

17. தன்வினை பிறவினையாக மாறும்போது ஏற்படும் மாற்றத்தினை எழுதுக.

18. வழக்கு என்றால் என்ன ? அதன் வகைகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

## பகுதி - II

## பிரிவு - அ

குறிப்பு : **அனைத்து** வினாக்களுக்கும், ஒவ்வொன்றிற்கும் **100** சொற்களுக்கு **மிகாமல்** விடையளிக்கவும். **10x2=20**

19. பாடநூல் ஆய்வின் புற அமைப்புக் கூறுகள் யாவை ?

20. சொல் என்றால் என்ன ? நான்கு ஓரெழுத்துச் சொற்களை எழுதுக.

21. படைப்பாற்றல் திறன் வளர பெருமித உணர்வு ஏன் தேவை ?

22. வந்தப் பையன், திறந்தக் கதவு ஆகிய தொடர்களில் இடம்பெற்றுள்ள பிழையைக் காரணத்துடன் எழுதுக.

23. விதி விலக்கு அறியாமையினால் ஏற்படும் பிழைகள் இரண்டனை எழுதுக.

[ திருப்புக

24. மாணவர்கள் அதிகம் செய்கின்ற வரிவடிவப் பிழைகள் நான்கினை எழுதுக.

25. ஒலியியல் தட்டச்சு முறை பற்றி எழுதுக.

26. கணினிவழி மொழியைக் கற்றலினால் ஏற்படும் பயன்களை எழுதுக.

27. சுவடிக் காட்சியகம் பற்றிய செய்திகளை எழுதுக.

28. ஒரு வினாத்தாள் பெற்றிருக்க வேண்டிய கூறுகள் யாவை ?

## பிரிவு - ஆ

**குறிப்பு : எவையேனும் ஐந்து** வினாக்களுக்கு, ஒவ்வொன்றிற்கும் 200 சொற்களுக்கு **மிகாமல்** விடையளிக்கவும். 5x4=20

29. மொழிக் கல்வியில் பாடநூல்களின் பங்கு பற்றி எழுதுக.

30. மொழிப் பாடத்தை எளிமையாகக் கற்பிப்பதற்கு ஏற்ற நான்கு சொல் விளையாட்டுகள் உருவாக்குக.

31. கீழ்க்காணும் தொகைச் சொற்களை விரித்து எழுதுக.

(அ) இரட்டைக்காப்பியம் (ஆ) முக்கனி

(இ) நானிலம் (ஈ) ஐந்திலக்கணம்

32. சிறுகதையின் வடிவம் குறித்து எழுதுக.

33. சொல்லிலக்கணப் பிழைகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

34. ஒரு வாக்கியத்தில் ஏற்படும் இயைபுப் பிழைகளுக்கு எடுத்துக்காட்டுகள் தருக.

35. தமிழ் இணைய மாநாடுகள் பற்றி எழுதுக.

36. தாய்மொழி கற்பித்தலில் மொழிப் பயிற்றாய்வுக் கூடத்தின் பங்கினைக் கூறுக.

## பகுதி - III

குறிப்பு : ஒவ்வொரு வினாவிற்கும் **500** சொற்களுக்கு **மிகாமல்** விடையளிக்கவும். **2x10=20**

**37.** (அ) பேராசிரியர் ஆர்.ஹெச். தவே அவர்கள் உருவாக்கிய ஐந்தாம் வகுப்பு மொழிப் பாடத்திட்டத்தின் திறன் பகுதிகளையும், திறன்களையும் விளக்குக.

**அல்லது**

(ஆ) கட்டுரை எழுதும் நோக்கங்களையும் வழிமுறைகளையும் எழுதுக.

**38.** (அ) பல்லூடகப் பயன்பாட்டின் வழியாகத் தமிழ் மொழியினைச் சிறப்பாகக் கற்பிக்க இயலும் - இக்கூற்றினை நிறுவுக.

**அல்லது**

(ஆ) சிறந்த தேர்வின் பண்புகளை விளக்குக.

**- o O o -**